**காலாண்டு பொதுத்தேர்வு செப்டம்பர் - 2017**

**பத்தாம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாள் விடைக்குறிப்பு.**

| | | |
|---|---|---|
| | **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | **5×1=5** |
| 1 | அ) திண்ணை. | 1 |
| 2 | அ) பசு. | 1 |
| 3 | ஆ) கொளல் வினா. | 1 |
| 4 | இ) மீமிசைஞாயிறு. | 1 |
| 5 | ஆ) ப∴றீது. | 1 |
| | **கோடிட்ட இடங்களை நிரப்புக.** | **5×1=5** |
| 6 | கால் மாத்திரை. | 1 |
| 7 | பெயரைக். | 1 |
| 8 | ஒருபொருட்பன்மொழி. | 1 |
| 9 | போல. | 1 |
| 10 | ஐய. | 1 |
| | **சுருக்கமாக விடையளிக்க.** | **10×1=10** |
| 11 | ஓரெழுத்து ஒருமொழியில் வல்லினம் மிகும். (எ.கா) தை+பொங்கல்=தை**ப்**பொங்கல்<br>**(பொருத்தமாக எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கவும்)** | 1 |
| 12 | திருக்குறளை அனைவரும் **அறிவாரா?** | 1 |
| 13 | வேல்விழி திருக்குற**ளைப்** படித்தாள். | 1 |
| 14 | மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்ற**ன**. | 1 |
| 15 | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. | 1 |
| 16 | எனது இளமைக்கால நிகழ்வுகள் **பசுமரத்தாணி போல** நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன. | 1 |
| 17 | **இவ்வழியே புண்ணியப்** பயணம் செல்லுங்கள். | 1 |
| 18 | **'**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**'** என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். | 1 |
| 19 | அடுக்குத்தொடர். | 1 |
| 20 | பொய்யழுகை. | 1 |
| | **எவையேனும் ஐந்தினுக்கு மட்டும்.** | **5×2=10** |
| 21 | சொல்லுக்கு முதலில் மட்டும் வரும் **ஔ**காரம் தனது மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது ஔகாரக் குறுக்கம் எனப்படும். ***சான்று* ஔ**வை - 1½ மாத்திரை. | 2 |
| 22 | ஓர் எழுத்து தனியாகவோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவது சொல் எனப்படும். | 2 |
| 23 | ஓர் எச்ச வினை பெயரைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம் எனப்படும். **சான்று** படித்த கயல்விழி. தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்பு பெயரெச்சம் என இரண்டு வகைப்படும். | 2 |
| 24 | விடை எட்டு வகைப்படும். 1.சுட்டு விடை 2.மறை விடை 3.நேர் விடை 4.ஏவல் விடை 5.வினா எதிர்வினாதல் விடை 6.உற்றது உரைத்தல் விடை 7.உறுவது கூறல் விடை 8.இனமொழி விடை. | 2 |
| 25 | அடுக்குத்தொடர் / இரட்டைக்கிளவி<br>சொற்கள் தனித்தனியே நிற்கும். / சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும்.<br>பிரித்தால் பொருள் தரும். / பிரித்தால் பொருள் தராது.<br>இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும். / இரட்டித்தே வரும்.<br>விரைவு,அச்சம், வெகுளி, மகிழ்ச்சி பற்றி வரும். / இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும்.<br>**சான்று** வா வா. / **சான்று** சலசல. | 2 |
| 26 | போல, புரைய, ஒப்ப, உறழ. | 2 |
| 27 | நோக்கி - நோக்கு+அ.<br>நோக்கு - பகுதி,<br>இ - வினையெச்ச விகுதி. | 2 |

| | | |
|---|---|---|
| | **எவையேனும் இரண்டினுக்கு மட்டும்** | **2×5=10** |
| 28 | **அணிவிளக்கம்:** புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.<br>**எடுத்துக்காட்டு:** தேவர் அனையர் கயவர் அவருந்தாம்<br>மேவன செய்தொழுக லான்.<br>**அணிப்பொருத்தம்:** இப்பாடலில், தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறி தீயவர்கள் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளது. எனவே, இது வஞ்சப்புகழ்ச்கி அணி ஆகும். | **5** |
| 29 | **அணிச்சுட்டல்:** இக்குறட்பாவில் சொல்பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.<br>**அணிவிளக்கம்:** செய்யுளில் ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது.<br>**எடுத்துக்காட்டு:** தீயவை தீய பயத்தலால் தீயவை<br>தீயினும் அஞ்சப் படும்.<br>**அணிப்பொருத்தம்:** இக்குறள்பாவில், **தீய** என்னும் சொல் **தீமை** என்ற பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, இது சொல்பொருள் பின்வரு நிலையணி ஆகும். | **5** |
| | **(அல்லது)** | |
| | **அணிவிளக்கம்:** உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.<br>**எடுத்துக்காட்டு:** பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்<br>சால மிகுத்துப் பெயின்.<br>**அணிப்பொருத்தம்:** மென்மையான மயில் தோகையை அதிகமாக ஏற்றினால் வண்டியின் அச்சு ஒடிந்துவிடும் என்பது உவமை. பகைவர்கள் ஒன்றுகூடின், வலிமையான மன்னனை எளிதில் வென்றுவிடுவார் என்பது பொருள். எனவே, இது பிறிதுமொழிதல் அணி ஆகும். | |

| வினா | வ.எண் | சீர் | அசை | வாய்பாடு | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 30 | | | | | **5** |
| | 1 | கா/லம் | நேர்/நேர் | தேமா | **2** |
| | 2 | கரு/தி | நிரை/நேர் | புளிமா | |
| | 3 | இருப்/பர் | நிரை/நேர் | புளிமா | |
| | 4 | கலங்/கா/து | நிரை/நேர் /நேர் | புளிமாங்காய் | **2** |
| | 5 | ஞா/லம் | நேர்/நேர் | தேமா | |
| | 6 | கரு/து | நிரை/நேர் | புளிமா | |
| | 7 | பவர் | நிரை | மலர் | **1** |
| | இக்குறட்பா **மலர்** என்ற வாய்பாட்டில் முடிந்துள்ளது. | | | | |

| | | |
|---|---|---|
| | **எவையேனும் இரண்டினுக்கு மட்டும்.** | **2×5=10** |
| 31 | முன்னுரை | **1** |
| 32 | பொருளுரை | **3** |
| 33 | முடிவுரை<br>**வினாவிற்கேற்ப பத்திவாரியாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்.** | **1** |
| 34 அ | **ஆங்கிலச் சொல்லுக்கான தமிழாக்கம்.**<br>சுரேஷ் **என்ன நிகழ்ந்தது?** ஏன் **தாமதமாய்** வருகிறாய்? வழியிலே **போக்குவரத்து நெரிசல்**. அதனால்தான் **தாமதம்**. சரி சரி **பேருந்து** எத்தனை மணிக்கு வரும்? **பயணச்சீட்டு** கிடைத்ததா? **பேருந்து 10 மணி 30 நிமிடத்திற்கு** வரும். **கடந்த வாரமே முன்பதிவு** செய்துவிட்டேன். | **3** |
| 34 ஆ | **தமிழெண்கள்**<br>23 - **உங** 64 - **சுச** 175 - **கஎரு** 289 - **உஅகூ** | **2** |
| 35 அ | **ஆங்கில உரைப்பத்திக்கான தமிழாக்கம்.**<br>தொலைக்காட்சி தற்கால இந்தியாவின் அதிசயங்களில் ஒன்றாகும். நகர்ப்புற மக்களுக்காக கல்வி, உடல்நலம், வேளாண்மை, குடும்பக்கட்டுப்பாடு போன்ற பயனுள்ள நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பயன்படுகின்றன. குறித்த நேரங்களில் சுவையான நாடகங்கள், திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. வணிக விளம்பரங்களுக்கும் தொலைக்காட்சி பயன்படுகிறது. | **3** |
| 35 ஆ | **தமிழ்ப் பழமொழிகள் (இரண்டினுக்கு மட்டும்)**<br>1. செய்யும் தொழிலே தெய்வம்.<br>2. பணம் பத்தும் செய்யும்.<br>3. பேராசை பெருநட்டம்.<br>4. அறிவே ஆற்றல். | **2** |

| | | |
|---|---|---|
| 36 | **எவையேனும் ஒன்றினுக்கு மட்டும்** | |
| அ | **பொருத்தமான சூழலில் கதை எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கவும்.** | **5** |
| ஆ | **பொருத்தமான சூழலில் கவிதை எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கவும்.** | **5** |
| 37 | **பாடலின் திரண்ட கருத்தை எழுதி,அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்.**<br>**திரண்ட கருத்து:** மனிதர் அனைவரும் பரந்த மனம் உடையவராக மாற்றுவது நூலகம். மனிதர்களிடையே உள்ள இருளை அகற்றி உயர்ந்த எண்ணங்களை உருவாக்குவது நூலகம். மனிதர்கள் புனிதராகவும் புது வாழ்வு பெறவும் நாடு முழுவதும் நூலகம் வேண்டும்.<br>**பொருள்நயம்:** அன்பு, நல்ல உள்ளம், உயர்ந்த எண்ணம் போன்றனநூலகம் மூலம் பெறலாம்.<br>**எதுகைநயம்:** அடிகள் தோறும் இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது.<br>ம**னி**தரெலாம்-த**னி**மனித இ**னி**தினிதாய்-பு**னி**தமுற்று.<br>**மோனைநயம்:** முதல் எழுத்து ஒன்றி வருவது. **த**னிமனிதத்-**த**த்துவமாம் -- இணை மோனை.<br>**அணிநயம்:** உவமை அணி இடம்பெற்றுள்ளது. **போல்** என்ற உவம உருபு வந்துள்ளது.<br>**பாவகை:** எண்சீர் ஆசிரிய விருத்தம். | **5** |
| 38 | **படிவம்** | **5** |
| | கணக்கு எண்<br>பெயர்<br>நாள்<br>வங்கியின் பெயர் கிளை<br>தொகை<br>கையொப்பம் | **½**<br>**1**<br>**1**<br>**1**<br>**1**<br>**½** |
| 39அ | **வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க.(பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்கவும்)** | **3** |
| 1 | திருமணம் செய்து கொள்ளாமல் தொடர்ந்து படிக்க முடிவெடுப்பாள். | **1** |
| 2 | பெற்றோரிடம் எனது நிலையை புரிய வைக்க ஆசிரியரின் துணையை நாடுவேன். | **1** |
| 3 | முடிவெடுக்கும் திறன். | **1** |
| 39ஆ | **வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க.(பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்கவும்)** | **2** |
| 1 | சரி. | **1** |
| 2 | நல்ல நண்பர்களோடு நட்பு கொள்ள வேண்டும். | **1** |
| 40 | **எவையேனும் ஒன்றினுக்கு மட்டும்** | **1×10=10** |
| அ | **விண்ணப்பக் கடிதம்**<br>அனுப்புநர்<br>பெறுநர்<br>விளித்தல்<br>பொருள்<br>செய்தி<br>இப்படிக்கு<br>இடம், தேதி<br>உறைமேல் முகவரி | <br>**1**<br>**1**<br>**½**<br>**1**<br>**4**<br>**½**<br>**1**<br>**1** |
| ஆ | **நண்பனுக்குக் கடிதம்**<br>இடம், நாள்<br>விளித்தல்<br>செய்தி<br>இப்படிக்கு<br>உறைமேல் முகவரி | <br>**1**<br>**2**<br>**5**<br>**1**<br>**1** |
| 41 | **எவையேனும் ஒன்றினுக்கு மட்டும்** | **1×10=10** |
| அ<br>ஆ | தலைப்பு<br>முன்னுரை<br>பொருளுரை<br>உள்தலைப்புகள்<br>மேற்கோள்<br>முடிவுரை | **1**<br>**1**<br>**4**<br>**2**<br>**1**<br>**1** |

**தயாரிப்பு : க.வேல்முருகன் எம்.ஏ.,எம்.எட்.,எம்.ஃபில்., அரசு உயர்நிலைப் பள்ளி, ஆர்ப்பாக்கம், திருவண்ணாமலை மாவட்டம்.**